16.03.2026

அ.வ.எண்.583/2014

பி.சா.3 முனியம்மாள் குறுக்கு விசாரணை

1. எனது பிரமாணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் எனது வக்கில் படித்து காட்டினார். பி.சா.ஆ.3 பொது அதிகார பத்திரம் எந்த தேதி, எந்த வருடம் எழுதி கொடுத்தார்கள் என்றால் சுமார் 10 அல்லது 12 வருடத்திற்கு முன்பு எழுதிக் கொடுத்தார்கள், சரியான தேதி, வருடம் ஞாபகமில்லை. நான் திருமணம் ஆகி 37 வருடமாக செங்கல்பட்டு மாவட்டத்தில் குடியிருந்து வருகிறேன். ஆனால் நான் சென்னையில் குடியிருப்பதாக மனு தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரிதான். பொது அதிகார பத்திரம் எழுதி கொடுததார்களா அல்லது அடமானம் பத்திரம் எழுதிக் கொடுத்தார்களா என்றால் விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், எனது கணவர் விவரத்தை சொன்னார்.

2. தாவாசொத்து சிறுதாமூர் கிராமத்தில் உள்ளது. 1ம் மற்றும் 2ம் பிரதிவாதிகள் எங்குள்ளார்கள் என்றால் சென்னையில் வசித்து வருகிறார்கள். எவ்வளவு வருடம் அங்குள்ளார்கள் என்றால் சுமார் 50 வருடம் இருக்கும். 1ம் மற்றும் 2ம் பிரதிவாதிகள் கூலி வேலை பார்த்து வருகிறார்கள். தாவாசொத்து 1ம் வாதி எனது அப்பா உயிருடன் இருந்த வரை அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். தற்போது 2ம் வாதி பழனி தான் பயிர் வைத்து வருகிறார் என்றால் சரியல்ல, 1ம் மற்றும் 2ம்

பிரதிவாதிகள் தான் விவசாயம் செய்து வருகிறார்கள். அவர்கள் பயிர் வைத்து வருவதை நான் நேரடியாக சென்று பார்த்தேனா என்றால் அவர்கள்தான் விவசாயம் செய்து வருகிறார்கள்.

3. தற்போது 1ம் மற்றும் 2ம் பிரதிவாதிகள் என்ன பயிர் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. பொது அதிகார பத்திரத்தை 1ம் மற்றும் 2ம் வாதி மற்றும் எனது கணவர் ஜனார்த்தனன் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தார்கள் என்று எனது பிரமாணவாக்குமூலத்தில் கூறியுள்ளேன் அந்த விவரத்தை யார் சொன்னார்கள் என்றால் எனது கணவர் சொல்லிதான் தெரியும். 1ம் பிரதிவாதி பணம் கொடுத்த விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, எனது கணவருக்குதான் தெரியும். எனது அப்பா ரூ.10,000/-யை 1ம் பிரதிவாதியிடம் கடன் பெற்றதற்கு அடமானம் பத்திரம் எழுதி தருவதாக கூறி 1ம் பிரதிவாதி பொது அதிகார பத்திரத்தை எழுதி வாங்கிவிட்டார் என்றால் எனக்கு தெரியாது.

4. தாவாசொத்து சிறுதாமூர் கிராமத்தில் இருப்பதால், சென்னையிலிருக்கும் 1ம் பிரதிவாதி பொது அதிகாரம் கொடுப்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லை என்றால் சரியல்ல. தாவாசொத்து இன்றைய தேதியில் யார் அனுபவித்து வருகிறார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல.